# 22 சிலுவைப் பாதை

பங்கு மக்களின் வருடாந்த தவக்காலத் திருயாத்திரை



வாருங்கள் ஒரே குடும்பத்தின்
பிள்ளைகளாய்
இயேசுவின் திருப்பாடுகளைத்
தியானிப்போம்.

| | | |
|---|---|---|
| இடம் | : | ஹினிதும கல்வாரித் திருத்தலம் |
| திகதி | : | மாசி மாதம் 25 |
| புறப்படல் | : | காலை 4.00 மணி |
| திரும்புதல் | : | மாலை 4.30 மணி |
| பயணக் கட்டணம் | : | 300/= |

**உங்கள் கவனத்திற்கு**

- ஆசனங்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளமையால் மாசி மாதம் 11 ஆம் திகதிக்கு முன்னர் பொருளாளரிடம் கட்டணத்தைச் செலுத்தி ஆசனங்களைப் பதிவுசெய்து கொள்வதோடு பயணத் தகவல் விபரங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

இப்பங்கு மக்கள் இந்தத் திருயாத்திரையை மேற்கொள்வதன் நோக்கம் சிலுவைப்பாதை செய்வதற்காகவே என்பது தெளிவாகிறது. சிலுவைப் பாதை எனப்படுவது கிறிஸ்துவின் திருப்பாடுகளையும் மரணத்தையும் நினைவு கூரும் ஒரு பக்தி முயற்சியாகும்.

## சிலுவைப்பாதையின் வரலாறு

திருச்சபையின் சம்பிரதாயங்களில் குறிப்பிடப்பட்டிருப்பதைப் போல கிறிஸ்துவின் சிலுவைப் பயணப் பாதையில் அன்னை மரியாவும் சென்

றிருக்கின்றாள். கொன்ஸ்டைன்டைன் பேரரசன் மறையை அனுசரிக்கும் சுதந்திரத்தை கிறிஸ்தவர்களுக்கு வழங்கிய பின், கிறிஸ்து கல்வாரியை நோக்கிச் சென்ற பயணத்தின் முக்கிய நிலைகள் அடையாளம் இடப்பட்டுள்ள தாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அப்பாதையின் வழியாக கிறிஸ்தவர்கள் சிலுவைப் பாதை செய்தனர். இதற்காகப் புனித நாடு (பலஸ்தினா) செல்ல வேண்டியிருந்தது. எனினும் 5ஆம் நூற்றாண்டிலிருந்து உலகிலே பல்வேறு இடங்களில் சிலுவைப் பாதை தியானம் செய்வதற்காக பாடுகளின் நிலைகளை ஆயத்தம் செய்தனர்.

## சிலுவைப் பாதையின் நிலைகள்

பிலாத்து இயேசுவின் மரணத்துக்குத் தீர்ப்பு வழங்கிய சந்தர்ப்பத்திலிருந்து இயேசு கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டது வரையான விசேட நிகழ்வுகள் சிலுவைப் பாதையில் நினைவுபடுத்தப்படுகின்றன. இவை 14 நிலைகளில் அடங்கும்.

**முதலாம் நிலை**



இயேசு மரணத்திற்குத் தீர்ப்பிடப்படுகின்றார்.

**இரண்டாம் நிலை**



கொடூர யூதர்கள் இயேசுவின் தோள்மேல் சிலுவையைச் சுமத்துகின்றனர்.

## மூன்றாம் நிலை



இயேசு முதல் முறை சிலுவையோடு கீழே விழுகின்றார்.

## நான்காம் நிலை



இயேசு தமது திருத்தாயாரை சந்திக்கின்றார்.

## ஐந்தாம் நிலை



சிரேனே ஊரானாகிய சீமோன் இயேசுவின் சிலுவையை சுமப்பதற்கு உதவுகின்றார்.

## ஆறாம் நிலை



வெரோணிக்கா என்ற பக்தியுள்ள பெண் இயேசுவின் திருமுகத்தைத் துடைக்கின்றாள்.

## ஏழாம் நிலை



இயேசு இரண்டாம் முறை சிலுவையோடு கீழே விழுகின்றார்.

## எட்டாம் நிலை



இயேசு எருசலேம் பெண்களுக்கு ஆறுதல் கூறுகின்றார்.

**ஒன்பதாம் நிலை**



இயேசு மூன்றாம் முறை
சிலுவையோடு கீழே
விழுகின்றார்.

**பத்தாம் நிலை**



இயேசுவின் ஆடைகளைக்
கழற்றுகின்றனர்.

**பதினோராம் நிலை**



இயேசு சிலுவையில்
அறையப்படுகின்றார்.

**பன்னிரெண்டாம் நிலை**



இயேசு சிலுவையில்
மரணிக்கின்றார்

**பதின்மூன்றாம் நிலை**



இயேசுவின் திரு உடல் சிலுவையிலிருந்து
இறக்கப்பட்டு அவரது திருத்தாயாரின்
மடியில் வைக்கப்படுகின்றது.

**பதினான்காம் நிலை**



இயேசுவின் திருவுடல்
கல்லறையில் அடக்கம்
செய்யப்படுகின்றது.

இப்பக்தி முயற்சியைச் செய்வதற்கு ஓர் ஒழுங்கு முறை உண்டு. அத்தோடு இதற்கே உரித்தான செபங்களும் பாடல்களும் உள.

### சிலுவைப்பாதை செய்யும் ஒழுங்கு முறை

- சிலுவைப்பாதையின் நிலைகளின் பெயர்களைச் சொல்லுதல்
- **முதல்வர்** : திவ்விய இயேசுவே, உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் பண்ணுகின்றோம்.
- **துணைவர்** : அதேனென்றால் உம்முடைய திருச்சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.
- **தியானம்**

  1 பர. 1 அருள், 1 திரி.
- **செபம்**
- **முதல்வர்** : எங்கள் பேரில் தயவாய் இரும் சுவாமி,

  மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள் சருவேசுரனுடைய இரக்கத்தினால் சமாதானத்தில் இளைப்பாறக் கடவன.
- **துணைவர்** : ஆமென்.
- **பாடல்**

  எங்கே சுமந்து போறீர்
  சிலுவையை நீர் எங்கே சுமந்து போறீர்
  பொங்கும் பகைவராலே அங்கம் நடுநடுங்க
  எங்கே போறீர்

இயேசுவின் திருப்பாடுகளை சிலுவைப்பாதையின் வழியாக நாம் நினைவு கூர்கின்றோம். ஆகவே மரியாதையுடனும் பக்தியுடனும் இப்பக்தி முயற்சியை செய்வதோடு, நாமும் அத்துன்பங்களைத் தாங்கிக் கொள்ள பங்காளிகளாக வேண்டும். எனவே தவக்காலத்தில் வரும் அனைத்து வெள்ளிக்கிழமைகளிலோ அல்லது இயலுமான போதெல்லாம் தனியாக அல்லது, பொதுவாக இப்பக்தி முயற்சியில் பங்கு பற்றுதல் கிறிஸ்தவர்களாகிய எமது கடமையாகும். அதேபோன்று வாழ்க்கையில் எதிர்கொள்ளும் துன்பங்களையும் சவால்களையும் விருப்புடன் ஏற்று வாழ்வதன் வழியாகவும் ஒறுத்தல் முயற்சிகளில் ஈடுபடுவதன் வழியாகவும் இக்காலத்தைச் செலவிடுதல் எமது கடமையாகும்.

## செயற்பாடு

1. சிலுவைப்பாதைத் தியானத்தின்போது நாம் எதனை நினைவு கூருகின்றோம்?
2. இப்பக்தி முயற்சி உருவாவதற்குக் காரணமான வரலாற்றுப் பின்னணியை எழுதவும்.
3. ஒவ்வொரு நிலையிலும் சிலுவைப்பாதை செய்யும் விதத்தினை எழுதவும்.



**வாழ்க்கைக்கு...**

uÁUPõ»zvÀ C¯¾©õÚ ÷£õöuÀ»õ®
uÛ¯õP÷Áõ ö£õx ÁõP÷Áõ ]¾ø Á¨
£õøu ö\´ ÷Áõ®.